வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 24.7.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

மத்திய பட்ஜெட்டில், சில மாநிலங்களுக்கு பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுவதை, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மறுத்துள்ளார்.

இன்று நாடாளுமன்ற இரு அவைகளிலும், மத்திய பட்ஜெட் மீதான விவாதம், எடுத்துக் கொள்ளப் பட்டது.

பால் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிப்பதாகவும், உலகின் மொத்த பால் உற்பத்தியில் இந்தியா 25 சதவிகிதப் பங்களிப்பதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நீட்-யுஜி தேர்வைக் கைவிட்டு, மாநில அளவிலான நுழைவுத் தேர்வுகளை மீண்டும் கொண்டு வர, தற்போது உத்தேசம் இல்லை என்று, மத்திய அரசு தெளிவுபடுத்தி உள்ளது.

*நிர்மலா*

மத்திய பட்ஜெட்டில் சில மாநிலங்களுக்கு பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாக கூறப்படுவதை, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மறுத்துள்ளார். இதுகுறித்து இன்று மாநிலங்களவையில் எதிர்கட்சிகள் வெளியிட்ட குற்றச்சாட்டுகளுக்கு அவர் பதில் அளிக்கையில், எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு எதுவுமே வழங்கப்படவில்லை என்பது போன்ற தோற்றத்தை மக்களிடையில் ஏற்படுத்துவதே காங்கிரஸ் தலைமையிலான எதிர்கட்சிகளின் நோக்கம் என்றார். ஒவ்வொரு பட்ஜெட்டிலும் ஒவ்வொரு மாநிலத்தின் பெயரையும் குறிப்பிட வாய்ப்பு கிடைப்பதில்லை என்றும், பட்ஜெட் உரையில் ஒரு மாநிலத்தின் பெயர் வராவிட்டால் மத்திய திட்டங்கள் அம்மாநிலத்திற்கு போகாது எனப் பொருள் அல்ல என்றும் நிதியமைச்சர் கூறினார். நேற்றைய பட்ஜெட்டிற்கும், முந்தைய இடைக்கால பட்ஜெட்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், மகாராஷ்டிரா மற்றும் மேற்குவங்கத்திற்கான பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக அவை கூடிய உடனேயே எதிர்கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இப்பிரச்சனையை எழுப்பி பேசுகையில், மத்திய பட்ஜெட், அரசை காப்பாற்றிக் கொள்வதற்கான பட்ஜெட்டாகவே அமைந்திருப்பதாக கூறினார். பட்ஜெட்டில் சமநிலை இல்லாவிட்டால், வளர்ச்சி எப்படி ஏற்படும் என்றும் அவர் வினவினார். நிதியமைச்சரின் பதிலைத் தொடர்ந்து எதிர்கட்சிகள் மாநிலங்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தன.

இதற்கிடையே இன்று மக்களவையிலும், இதே பிரச்சனை தொடர்பாக எதிர்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தன. பீகார் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தை தவிர இதர மாநிலங்களுக்கு பட்ஜெட்டில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாக, இன்று காலை அவையின் அலுவல்கள் தொடங்கிய உடனேயே, காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டு வெளியிட்டனர். சபாநாயகர் திரு ஓம் பிர்லா, எதிர்கட்சிகள் நடந்து கொள்ளும் விதத்தை ஆட்சேபித்து, கேள்வி நேரத்தை திட்டமிட்டே தடைப்படுத்த முயல்வது, ஏற்கதக்கது அல்ல என்றார். நாடாளுமன்ற

விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு எதிர்கட்சிகள் நடந்து கொள்ளும் விதத்தை ஆட்சேபித்தார்.

எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில், பட்ஜெட்டில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டி, எதிர்கட்சி எம்பிக்கள், இன்று காலை நாடாளுமன்ற வளாகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மத்திய அரசு அனைத்து மாநிலங்களையும் சமமாக நடத்த வேண்டும் என இவர்கள் வலியுறுத்தினர்.

விவாதம்

மக்களவையில், மத்திய பட்ஜெட் மீதான விவாதம் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது. காங்கிரஸ் உறுப்பினர் குமாரி ஷெல்ஜா விவாதங்களைத் தொடக்கி வைத்துப் பேசுகையில், நாட்டில் நாளுக்கு நாள் வேலை வாய்ப்பின்மை அதிகரித்து வருவதாக குற்றம் சாட்டினார். மத்திய அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் வினவினார். அக்னிவீர் திட்டத்தை அவர் ஆட்சேபித்து, அரசு இத்திட்டத்தை விலக்கிக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார். பட்ஜெட்டில்,

விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார். வேளாண் விளை பொருட்கள் மீதான குறைந்த பட்ச ஆதரவு விலை குறித்து, விவசாயிகளுக்கு சட்ட உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்றும், தினக்கூலி தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச கூலியை 400 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்றும் அவர் கோரினார். பிஜேபி உறுப்பினர் திரு பிப்லப் குமார் தேப், விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில் 2014-ஆம் ஆண்டின் உலகின் 5 பலவீன பொருளாதாரங்களில் ஒன்றாக இருந்த இந்தியாவை, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு தான், வெளிப்படைத் தன்மையுடன் வலுப்படுத்தி இருப்பதாக கூறினார். நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் மூலதன செலவினங்கள், கடந்த ஆண்டைவிட 18 சதவிகிதம் உயர்த்தப்பட்டுள்ளதால், உள்கட்டமைப்பு மற்றும் வேலை வாய்ப்புகள் மேம்படும் என்று அவர் தெரிவித்தார். மத்திய பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக திமுக உறுப்பினர் திரு தயாநிதி மாறன் குற்றம் சாட்டினார். வெள்ளக்

கட்டுப்பாட்டு பணிகளுக்கென, தமிழகத்திற்கு நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை என்று அவர் கூறினார். மாநிலங்களவையில் காங்கிரஸ் உறுப்பினர் திரு ப சிதம்பரம் விவாதங்களை தொடக்கி வைத்துப் பேசுகையில், உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டத்தினால் போதிய வேலை வாய்ப்புகள் உருவாகாத நிலையில், வேலை வாய்ப்புடன் இணைந்த புதிய ஊக்குவிப்பு திட்டத்தினால் எந்த பலனும் இராது என்றார். பணவீக்கம், அரசுப் புள்ளி விவரங்களை விட அதிகமாகவே இருப்பதாகவும் பட்ஜெட் உரையில் பணவீக்கம் குறித்து அதிகம் பேசப்படவில்லை என்றும் அவர் கூறினார். நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிஜேபி உறுப்பினர் டாக்டர் ராதாமோகன் அகர்வால் விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, 14 கோடி கிராமப்புற வீடுகளுக்கு, குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்கி இருப்பதாகவும், ஏழைகளுக்கு மருத்துவ வசதி வழங்குவதில், ஆயுஷ்மான் பாரத் திட்டம் முக்கிய பங்காற்றி வருவதாகவும்

கூறினார். 2012-13-ஆம் ஆண்டில் 10 சதவிகிதமாக இருந்த நிதி பற்றாக்குறை தற்போது 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டில் தனிநபர் வருமானம் அதிகரித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இருஅவைகளிலும், பட்ஜெட் மீதான விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றன.

*பால் உற்பத்தி*

பால் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிப்பதாகவும், உலகின் மொத்த பால் உற்பத்தியில் இந்தியா 25 சதவிகிதப் பங்களிப்பதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது. உலக அளவிலான பால் உற்பத்தி, ஆண்டுக்கு 2.1 சதவிகித அளவில் மட்டுமே அதிகரித்து வரும் நிலையில் இந்தியாவின் பால் உற்பத்தி, கடந்த 9 ஆண்டுகளில், 6 சதவிகித அளவில் அதிகரித்து இருப்பதாக மத்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத் துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங், இன்று மாநிலங்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். பாலின் கொள்முதல் விலை மற்றும் விற்பனை விலை, உற்பத்தி செலவு மற்றும் சந்தை சக்திகளின்

அடிப்படையில், கூட்டுறவு மற்றும் தனியார் பால் பண்ணைகளால் முடிவு செய்யப்படுவதாக அமைச்சர் மேலும் கூறினார்.

*நீட் தேர்வு*

நீட்-யுஜி தேர்வைக் கைவிட்டு, மாநில அளவிலான நுழைவுத் தேர்வுகளை மீண்டும் கொண்டு வர தற்போது உத்தேசம் இல்லை என்று மத்திய அரசு தெளிவுபடுத்தி உள்ளது. கல்வித் துறை இணை அமைச்சர் டாக்டர் சுகந்த மஜூம்தார் இன்று மாநிலங்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் இதைத் தெரிவித்தார். கடந்த ஜுன் மாதம் நடைபெற்ற யுஜிசி-நெட் தேர்வு ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து வரும் ஆகஸ்டு 21-ஆம் தேதிக்கும் செப்டம்பர் 4-ஆம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கணிப்பொறித் தேர்வாக இத்தேர்வை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

*பிஜேபி*

நீட் தேர்வின் புனித தன்மையில் பாதிப்பு நேரவில்லை என உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்திய பின்னரும், எதிர்கட்சிகள் தொடர்ந்து, நாட்டு மக்களை தவறான பாதையில் இட்டுச்

செல்வதாக, மூத்த பிஜேபி தலைவர் திரு ரவிசங்கர் பிரசாத் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீட் பிரச்சனை குறித்து தகவல் கிடைத்த உடனேயே, மத்திய அரசு,சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டதாகவும் இப்பிரச்சனையில் எதிர்கட்சிகள் நடந்து கொள்ளும் விதம் கண்டிக்கத் தக்கது என்றும் கூறினார். மத்திய பட்ஜெட்டை விமர்சிக்கும் முன்பாக, எதிர்கட்சிகள் பட்ஜெட் ஆவணத்தை, படித்து புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

*நிலக்கரி*

நடப்பு நிதியாண்டில் ஆயிரம் மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. கடந்த ஜுலை 19-ஆம் தேதி வரை நாட்டில் 294 மில்லியன் டன் நிலக்கரி வெட்டி எடுக்கப் பட்டுள்ளதாகவும், கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில், இது, 11 சதவிகிதம் அதிகம் என்றும் நிலக்கரித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. நாட்டின் அனைத்து அனல்மின் நிலையங்கள் மற்றும் உர உற்பத்தி ஆலைகளுக்கும், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட

விலையில், போதிய நிலக்கரி வழங்க அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*கண்காட்சி*

தஞ்சையில் வரும் 29-ஆம் தேதி வரை நடைபெறும் தஞ்சாவூர் புத்தகத் திருவிழாவில் மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் புத்தக வெளியீட்டுப் பிரிவு, அரங்கு ஒன்றை அமைத்துள்ளது. நாட்டின் வரலாறு, தேசிய தலைவர்களின் வரலாறு, மற்றும் போட்டித் தேர்வு நூல்கள் உட்பட 800-க்கும் அதிகமான தலைப்பில் புத்தகங்கள் இந்த அரங்கில், 10 முதல் 50 சதவிகித தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

*வானிலை*

குஜராத், கோவா, கொங்கண் மற்றும் மத்திய மகாராஷ்டிராவில், அடுத்த 2 நாட்களுக்கு, அதிகன மழை நீடிக்கும் என இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. இமாச்சல் பிரதேஷ், உத்தராகண்ட், பஞ்சாப், அரியானா, உத்தரபிரதேஷ், ராஜஸ்தான், தெலங்கானா, கேரளா மற்றும் தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு, லேசானது முதல்

மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மகாராஷ்டிர மாநிலத்தில், சத்தாரா, ராய்கார், புனே, தானே, நாசிக், ரத்னகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். தெற்கு குஜராத்தில் பாரூச், நர்மா உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று காலை முதல் கனமழை பெய்து வருவதால், சுமார் 12 ஆயிரம் கிராமங்களுடன் தொடர்பு துண்டிக்கப் பட்டுள்ளதாகவும், ஆறுகள் மற்றும் அணைகளில் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. உத்தராகண்டில் கடந்த 2 நாட்களாக மழை பெய்து வருவதால் கங்கோத்ரி தேசிய நெடுஞ்சாலை, யமுனோத்ரி தேசிய நெடுஞ்சாலை உட்பட பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

*புற்று நோய் மருந்து*

நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில், புற்றுநோய் சிகிக்கான 3 முக்கிய மருந்துகளுக்கு, சுங்க வரி விலக்கு அளிக்கப் பட்டுள்ளதால், மார்பகப் புற்றுநோய், நுரையீரல் புற்று நோய், மற்றும், பித்த நாளப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சுமார் 27 லட்சம் பேர் பயன் பெறுவார்கள் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. எக்ஸ்-ரே இயந்திரங்களுக்குத் தேவையான உதிரி பாகங்களுக்கும் சுங்கவரி குறைக்கப் பட்டுள்ளதால், இத்துறையினரும் பயன்பெறுவார்கள் என்று அமைச்சக வட்டாரங்கள் கூறி உள்ளன.

*அதாலத்*

நிலுவையில் உள்ள வழக்குகளை சுமுகமான முறையில் விரைந்து தீர்த்து வைக்கும் வகையில், உச்சநீதிமன்றம், இம்மாதம் 29- முதல், ஆகஸ்டு 3-ஆம் தேதி வரை, சிறப்பு லோக் அதாலத் அமர்வை நடத்த உள்ளது. உச்சநீதிமன்றத்தின் 75-ஆம் ஆண்டை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மக்கள் நீதிமன்ற அமர்வில், நிலுவை வழக்கு வைத்துள்ள அனைவரும்

கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திர சூட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மொபைல்

நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள, 17 ஆயிரத்து 611 கிராமங்களில், 16 ஆயிரத்து 818 கிராமங்கள், மொபைல் தொலைபேசி கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக, மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார். மொபைல் தொலைபேசி வசதி இல்லாத எல்லா கிராமங்களையும், இந்த வசதியின் கீழ் கொண்டு வர, USO நிதியின் கீழ் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாக அவர் இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார்.

மேக்வால்

நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டினால் சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களும் பயன்பெறுவார்கள் என்று மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் கூறி உள்ளார். நீதித் துறைக்கான கட்டமைப்பு வசதிகள், பட்ஜெட் ஒதுக்கீடுகள் உட்பட எல்லா

அம்சங்களையும் வலுப்படுத்துவது குறித்து, இணைய வழியில் இன்று நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய அவர், 2047-ஆம் ஆண்டிற்குள், அனைவருக்கும் உடனுக்குடன் எளிதாக நீதி கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையிலான, முன்னேறிய இந்தியாவிற்கு பாதை அமைப்பதாக இந்த பட்ஜெட்டைப் பார்க்க வேண்டும் என்றார்.

இஎஸ்ஐ

இவ்வாண்டு மே மாதம் சுமார் 23 லட்சம் புதிய தொழிலாளர்கள், இஎஸ்ஐ திட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ளதாக, மத்திய தொழிலாளர் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இவர்கள் சுமார் 11 லட்சம் பேர், 25 வயது வரையிலான பிரிவுக்கு உட்பட்டவர்கள் என்றும், சுமார் 4 லட்சத்து 47 ஆயிரம் பேர் பெண்கள் என்றும், அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

மத்திய பட்ஜெட்டில், சில மாநிலங்களுக்கு பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுவதை, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மறுத்துள்ளார்.

இன்று நாடாளுமன்ற இரு அவைகளிலும், மத்திய பட்ஜெட் மீதான விவாதம், எடுத்துக் கொள்ளப் பட்டது.

பால் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிப்பதாகவும், உலகின் மொத்த பால் உற்பத்தியில் இந்தியா 25 சதவிகிதப் பங்களிப்பதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நீட்-யுஜி தேர்வைக் கைவிட்டு, மாநில அளவிலான நுழைவுத் தேர்வுகளை மீண்டும் கொண்டு வர, தற்போது உத்தேசம் இல்லை என்று, மத்திய அரசு தெளிவுபடுத்தி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------------